
உ
சிவமயம்



மாதகல் கிழக்கு, மாதகலைப் பிறப்பிடமாகவும்,
வசிப்பிடமாகவும் கொண்ட



# அமரர். திரு.இராமசாமி சோமசுந்தரம்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13.08.2016

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



மாதகல் கிழக்கு, மாதகலைப் பிறப்பிடமாகவும்,
வசிப்பிடமாகவும் கொண்ட

# அமரர்

# திரு. இராமசாமி சோமசுந்தரம்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# - நினைவு மலர் -

**13.08.2016**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் திகழ்ந்து

பாசமிகு தந்தையாய் எமை வளர்த்து,

நாம் வளம் பெற்று வாழ வழி வகுத்த எம்

குலவிளக்கே அன்புடன் எம்மை எல்லாம்

பேணிப் பாதுகாத்து, உணரவைத்து, நல்வழி

நடத்தி வையத்துள் வாழ்வாங்கு வாழவைத்து

தெய்வத்துள் தெய்வமாகி விட்ட அன்பு

உள்ளத்தின் பொன்னடிகளில் இம்மலரை

சமர்ப்பணம் செய்கின்றோம்.

இங்ஙனம்

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"



அன்னை மடியில் 17.10.1954

இறைவன் அடியில் 14.07.2016

# அமரர். திரு. இராமசாமி சோமசுந்தரம்

## திதி வெண்பா

ஆண்டு துர்முகி ஆனி வியாழன் முப்பதாம் நாள்தனில்
பூண்ட சுவாதி அமிர்தசித்தம் திதியில் முருகனடி சேர்ந்திடவே
பேராவல் கொண்டார் இராமசாமி சோமசுந்தரம்
கார் மயிலோன் திருவடியை தினம் நினைந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



# பஞ்சபுராணம்

**விநாயகர் துதி**

ஐந்து கரத்தனை ஆனைமுகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே

## தேவாரம்

கூற்றாயின வாறு விலக்ககிலீர்
கொடுமைபல செய்தன நானறியேன்
ஏற்றாயடிக் கேயிர வும்பகலும்
பிரியாது வணங்குவ னெப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றின் அகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேனடி யேனதி கைக்கெடில
வீரட்டா னத்துறை யம்மானே

## திருவாசகம்

பால்நினைந் தூட்டும் தாயினும் சாலப்
பரிந்து நீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்தமாய
தேனினை சொரிந்து புறம் புறம் திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந்தருளுவ தினியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா வொன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனே விளம்புமா விளம்பே

## திருப்பல்லாண்டு

சீருந் திருவும் பொலியச்
சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன்
பெற்றதார் பெறுவாருலகில்
ஊரும் உலகுங் கழற
உழறி உமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும்
பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் மகிழ்ந்துபாடி
அறவாநீ ஆடும்போதுன் அடியின் கீழ் இருக்க என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

உம்பர்தரு தேனுமணிக் கசிவாகி
ஒண்கடலிற்றேனமுதத் துணர்வூறி
இன்பரசத் தேபருகிப் பலகாலும்
எந்தனுயிர்க் காதரவு றருள்வாயே
தம்பிதனக் காகவனத் தணைவோனே
தந்தை வலத்தாலருள்கைக் கனியோனே
அன்பர் தமக் கானநிலைப் பொருளோனே
ஐந்துகரத் தானைமுகப் பெருமானே

## வாழ்த்து

வான்முகில் வாழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

**திருச்சிற்றம்பலம்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



# கௌரி காப்பு

*விநாயகர் துதி*

முன்னின்று செய்யுள் முறையாய்ப் புனைவதற்கு
என்னின் றருள்செய் எலிவா கனப்பிள்ளையாய்
சொற்குற்றமொடு பொருட்குற்றம் சோர்வுதரும்
எக்குற்றமும் வராமற் கா.

**வேண்டுதல் கூற்று**

காப்பெடுக்க வந்தேனே கௌரியம்பாள் தாயாரே
காத்தென்னைத் தேற்றிடுவாய் காளிமகா தேவியரே
காலமெல்லாம் நின்னரிய காப்பெடுத்தே வாழ்ந்திடுவேன்
எண்ணும் கருமம் இனிதாக முடித்திடுவாய்
பண்ணும் வினையாவும் பனிபோலப் போக்கிடுவாய்
உண்ணும் உணவாக உயிரினுக் குயிராக
என்றும் இருந்தே எனைக்காத்து வந்திடுவாய்
காடும் கடந்துவந்தேன் மலையும் கடந்துவந்தேன்
காளிமகா தேவியரே காப்பெனக்குத் தந்திடுவாய்
சூலம் கொண்டவளே சுந்தர முகத்தவளே
அரியை உடையவளே அம்மா காளித்தாயே
கொடிய மகி ஷாருனைக் கூறு போட்டவளே
அசுரக் குணம்யாவும் அழிக்கும் சுடர்க்கொடியே
சிவனை நினைத்தல்லோ சீர்விரதம் நீயிருந்தாய்
பரனை நினைந்தல்லோ பதிவிரதம் நீயிருந்தாய்
அரனை நினைத்தல்லோ அம்மா நீ நோன்பிருந்தாய்
சங்கரனை எண்ணியல்லோ சங்கரிநீ நோன்பிருந்தாய்
ஐங்கரனைப் பெற்றவளே அன்றுநீ நோன்பிருந்தாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரதத்தைக் கண்டு விழித்தான் சிவனவனும்
அம்மா உமையணைத்தே அருள்மாரி பொழிந்தானே
வகையாற்றுப் படலமிதை வழிவழியாய்க் காட்டிடுவீர்
நெறியறியாத் திகைப்போர்க்கு நெறிமுறையைக் காட்டிடுவாய்
காப்பைப் புனைந்துவிடு காலபயம் ஓட்டிவிடு
நூலைப் புனைந்துவிடு நுண்ணறிவை ஊட்டிவிடு
வல்லமையைத் தந்துவிடு வையகத்தில் வாழவிடு
காளிமகா தேவியரே காப்பருளும் தேவியாரே
காப்பைப் புனைபவளே காப்பாய் இருப்பவளே
காடு செழிக்கவென்றே நற்காப்பு அருளுமம்மா
நல்வாழ்வு வாழ்வதற்கு நறுங்காப்பு அருளுமம்மா
அல்லல் அறுப்பதற்கே அருட்காப்பு அருளுமம்மா
பிள்ளை அற்றவர்க்கு பெருங்காப்பு அருளுமம்மா
பூமணியே மாமணியே புனிதவதி தாயவளே!
நான் விரும்பும் காப்பை நலமுடனே தாருமம்மா
கல்வி சிறப்பதற்குக் கலைமகளே வாருமம்மா
செல்வம் சிறப்பதற்குத் திருமகளே வாருமம்மா
வீரம் சிறப்பதற்கு வீரசக்தி தாருமம்மா
பாட்டுடைத் தலைவியரே பராசக்தி தாயவளே
ஏட்டுடைத் தேவியரே எல்லாம்மிகு வல்லமையே
காப்பெடுக்க வந்தேனம்மா கனிவுடனே பாருமம்மா
பால்பழங்கள் வெற்றிலைகள் பல்வகைத்திரவியங்கள்
நானுமக்குத் தாறேனம்மா நயந்தென்னைக் காருமம்மா
காளிமகா தேவியரே காசினிக்கு வித்தவளே
வித்தை விதைப்பவளே வினைகாக்கும் காப்பவளே

எத்தால் வாழ்ந்திடுவோம் எல்லாம் உமதருளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசினியில் வேற்றுமையைக் கணப்பொழுதே மாற்றிவிட்டால்
ஏசலின்றி வாழ்ந்திடுவோம் ஏத்துபுகழ் தேவியளே
காப்பெனக்குப் போட்டுவிட்டால் கல்மனது இளகிவிடும்
ஞானம் பெருகிவிடும் நல்வாழ்வு மிகுந்துவிடும்
தொடர்ந்து அணிவோர்க்கு தொட்டதெல்லாம் ஜெயமாகும்
இசைந்து அணிவோர்க்கு நினைத்ததெல்லாம் ஈடேறும்
நம்பி அணிவோர்க்கு நல்லதெல்லாம் பெருகிவரும்
நாள்கள் கோள்களெல்லாம் நலமுடனே இணைந்துவரும்
சந்தனச் சாந்தவளே சங்கரியே சாந்தினியே
குங்குமப் பூச்சவளே குலக்கொழுந்தே கௌரியம்மா
காப்புக் கட்டிவிட்டுக் கடமை முடிந்ததென்று
ஏப்பம் மிகவிட்டு என்றுமே இருந்தறியேன்
நாளும் பொழுதிலெல்லாம் நறுங்காப்புக் கட்டதனில்
பூவும் நீருமிட்டுப் போற்றி வணங்கிடுவேன்
காலைப் பொழுதெழுந்து காப்பதனில் விழித்திடுவேன்
ஞானச் செழுஞ்சுடரே காளியுன்னைக் காணுகின்றேன்
காப்பெனக்குக் கையிலுண்டு கடமைகளைச் செய்திடுவேன்
ஏய்ப்பவரைக் கண்டறிந்தால் எரிமலைபோற் கனன்றிடுவேன்
தீமைச் செயலெதுவும் தெரியாது செய்கையிலே
காப்புக் கையிலிருந்து கண்திறந்து காட்டுமடி
சொல்லற் கரிதான சோதிமிகு காப்பதனை
இருபது நாள்வரையில் இசைவோடு விரதமிகு
பக்தி மனதுடனே பரவி யணிவோர்க்கு
சித்தியெல் லாந்தருள்வாள் சீர்பெருகு கௌரியவள்
முத்திக்கு வழியுமுண்டு முக்கால உணர்வுமுண்டு

எச்சகத்தி லோர்களெல்லாம் ஏற்றியெமைப் போற்றிடுவார்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்சக்தி பொருட்சக்தி துலங்கி வந்திடவே
அச்சக்தி எல்லாம் அருள்வாய் கௌரியவள்
கௌரிக் காப்பதனைக் காலம் தவறாமல்
முறையாய் அணிந்துவர முன்வினைகள் நீங்கிவர
ஞானம் ஓங்கிவர நல்லறிவு துலங்கிவர
தேவிமகா காளியரே தெவிட்டாத தீங்கனியே
காளியாய் வந்தமர்ந்த கௌரியே காப்பருளும்.

*(கௌரி காப்பு முற்றிற்று)*

## காயத்திரி மந்திரம்

ஓம் பூர் புவஹு ஸ்வஹு
தத் ஸ்விதுர் வரேண்யம்
பர்கோ தேவஸ்ய தீமகி
த்யோ நோநக பரசோதயாத்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

*சிவமயம்*

குமரகுருபர சுவாமிகள் அருளிச்செய்த

# சகல கலாவல்லி மாலை

வெண்டா மரைக்கன்றி நின்பதந்
தாங்கவென் வெள்ளை யுள்ளத்
தண்டா மரைக்குத் தகாது கொலோ?
சகம் ஏழும் அழித்து
உண்டான் உறங்க ஒளித்தான் பித்
தாகவுண் டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே!
சகல கலாவல்லியே!

1

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்வாய்
பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
கனதனக் குன்று மைம்பாற்
காடும் சுமக்கும் கரும்பே!
சகல கலாவல்லியே!

2

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமுது
ஆர்ந்துன் அருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொலோ?
உளங் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக் கண்டு
களிக்கும் கலாப மயிலே
சகல கலாவல்லியே!

3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த
கல்வியும் சொற்சுவை தோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்வாய்
வட நூற்கடலும்
தேக்கும் செழுந்தமிழ்ச் செல்வமும்
தொண்டர் செந்நாவில் நின்று
காக்கும் கருணைக் கடலே!
சகல கலாவல்லியே!

4

பஞ்சப் பிதந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்னே?
நேடுந் தாட் கமலத்து
அஞ்சத் துவசம் உயர்த்தோன்
செந்நாவும் அகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
சகல கலாவல்லியே!

5

பண்ணும் பரதமும் கல்வியும்
தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்காய்
எழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலும்
கனலும் வெங்காலு மன்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய்
சகல கலாவல்லியே!

6

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கண்நல்காய்
உளங் கொண்டு தொண்டர்
தீட்டும் கலைத்தமிழ்த் தீம்பால்
அமுதம் தெளிக்கும் வண்ணம்
காட்டும் வெளியோதிமப் பேடே!
சகல கலாவல்லியே!

7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்விற் பனமும் அவதானமும்
கல்வி சொல்ல வல்ல
நல்வித்தையும் தந்தடிமை கொள்வாய்
நளினாசனஞ் சேர்
செல்விக் கரிதென் றொருகாலமுஞ்
சிதையாமை நல்கும்
கல்விப் பெருஞ் செல்வப்பேறே!
சகல கலாவல்லியே!

8

சொற்கும் பொருட்கும் உயிராம்மெய்ஞ்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார்?
நிலந்தோய் புழைக்கை
நற்குஞ்சரத்தின் பிடியோடு
அரசன்னம் நாணநடை
கற்கும் பதாம்புயத் தாயே!
சகல கலாவல்லியே!

9

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண்ட அளவிற் பணியச்செய்வாய்!
படைப்போன் முதலாம்
விண்கண்ட தெய்வம் பல்கோடி யுண்டேனும்
விளம்பில் உன்போற்
கண்கண்ட தெய்வ முளதோ?
சகல கலாவல்லியே!

10

*(சகல கலாவல்லி மாலை முற்றிற்று)*

*திருச்சிற்றம்பலம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர்
# திரு. இராமசாமி சோமசுந்தரம் அவர்களின்
# வளம் மிகுந்த வாழ்வியல் சுவடுகள்

செந்நெல் வயல்வெளியில் சிரித்து வரவேற்கும் பாணாகவெட்டி ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாளின் உள்ளக்கமலத்தில் உறங்கும் சோமசுந்தரம் வாழ்க்கை வரலாற்றை வடித்தெடுத்து வார்க்கின்றோம்.

நீர்வளமும் நிலவளமும் கடல்வளமும் ஒருங்கே அமையப் பெற்ற இலங்கை நாட்டிலே சைவமும் , தமிழும் சிறப்புடன் விளங்கும் செந்தமிழ் நகரமாம் யாழ்ப்பாணப்பதியில் அமைதியின் சின்னமாகவும், வரலாற்றுப் புகழ் பெற்ற ஆலயங்கள் பல சிறப்புற்று விளங்கும் மாதகல் என்னும் கிராமத்தில் சைவ வேளாள குலம் காத்து வந்த விவசாயத் தொழிலில் சிறந்து விளங்கிய இராமசாமி தங்கம்மா தம்பதிகளின் அருமை இளைய புதல்வனாக அமரர் சோமசுந்தரம் 17.10.1954 ம் திகதி இவ் பூவுலகில் அவதரித்தார்.

இவரது உதிரத்து உடன்பிறப்புக்கள் கந்தையா, சண்முகசுந்தரம், காலம்சென்றவர்களான, இராசம்மா, செல்லமுத்து, பேரம்பலம், வள்ளியம்மை, சிந்தாமணி, துரைராசா, ஆகியோர் ஆவர்.

இவர் ஆரம்பக்கல்வியை யா/மாதகல் விக்கினேஸ்வராவில் கற்று வந்தார். இவர் சிறுவயதில் தந்தையாரை இழந்து தாயாருடனும், சகோதரர்களுடனும், மைத்துனர்களான இராமுப்பிள்ளை, சவாரத்தினம், கந்தசாமி போன்றவர்களுடனும், மைத்துனிகளான சந்திரா, வசந்தராணி, இராசமணி, கமலாதேவி, இவர்களுடன் இளையவனாக இருந்து குறும்புத்தனங்கள் பல செய்து சிரித்துக் கதைபேசி உற்றார்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவினர் நண்பர்களுடன் இளமைப் பருவத்தை இனிமையுடன் கழித்தார்.

**" உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் வீணில் உண்டு கழித்திருப்போரை நிந்தனை செய்வோம்"**

என்ற மகாகவி பாரதியாரின் கவிவரிகளுக்கு அமைய விவசாயத் தொழிலிலும் சிறப்பாக ஈடுபட்டு விளைச்சலிலே தொட்டதெல்லாம் பொன்னாக துலங்கச் செய்து வெற்றியும் கண்டார். இளமையும், இனிமையும் கூடி வரும் இன்ப வேளையில் பெற்றார். சகோதரர் விருப்பப்படி சங்கானை தொட்டிலடியை சேர்ந்த கணபதிப்பிள்ளை பொன்னம்மா தம்பதிகளின் இளைய புத்திரியான மகேஸ்வரியை கரம் பிடித்து சிந்தனையால் ஈருடலும் ஓருயிருமாக பூவும் மணமுமாக இன்பமுடன் வாழ்ந்து வந்தனர்.

இல்லறத்தின் நல்லறப் பயனாக குரு, கோமலர், நிசாந்தன், ஆகிய மூன்று முத்து போன்ற செல்வங்களை பெற்றார் மூன்று செல்வங்களையும் தாலாட்டி சீராட்டி பாசத்துடன் வளர்ந்து சிறந்த கல்வியிலும் ஒழுக்கத்திலும், நேர்மை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் வளர்ந்து வந்தனர். அவர்களை திருமணம் செய்து மருமக்களையும் தம் பிள்ளைகள் போல் அன்பாலும் பண்பாலும் அரவணைத்து ஆசைக்கோர் மருமகன் சதீஸ்குமரன், அருமைக்கு இரு மருமகள்மார் லேகாந்தி, கஜினா போன்றவர்களை சீருடனும் சிறப்புடனும் வாழவைத்தார். அருமையுடன் வாழ்ந்திட்ட அப்பா பெறுதற்கரிய நற்பேரர் கூட்டமொன்று பெயர் விளங்க, குலம் விளங்க முதல் முதலில் வந்துதித்தாள் பூமிதனில் நதுஜா, நிருபன், கபிசனா, மாதங்கி, சரணிகா,தனுஷிகன் பேர மழலைகளை "ஆ" வென்று வாய்திறந்து அமுதென்று சோறூட்டி, பாலுட்டி, பழவகைகள் பலதும் தேடி சுவையான கதை சொல்லி சுவையும் ஊட்டி தொட்டிலிலே போட்டு தாலாட்டி பக்குவமாய் பள்ளிக்கு கூட்டிச் சென்று செல்ல மழலைகளுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறும்புத்தனங்கள் செய்து சிரித்துப் பேசி விளையாடிய நேரமதில் காலத்தின் கோலத்தால் விதியின் விளையாட்டால் கண்ணுக்கு தெரியாமல் கைவைத்தியருக்கு கூட கண்டுபிடிக்க முடியாமல் ஒரு கொடிய நோயில் ஓர் ஆண்டு துடி துடித்து தன்நிலை மெய் மறந்து கூடிப்பிறந்த அண்ணாமார், கட்டிய மனைவி, பெற்ற பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் உற்றார், உறவினர், நண்பர்கள், வந்து கதை கேட்க ஓர் ஆசை வார்த்தை சொல்ல முடியாமல் எல்லோர் மனதையும் நோக வைத்து 14.07.2016 பி.பகல் 8.00 மணிக்கு வியாழக்கிழமை ஆனி முப்பதாம் நாள் துர்முகி பூண்ட சுவாதி அமிர்தசித்த திதியில் முருகனின் திருவடி சேர்ந்தார்.

**ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!**



**உணர்வதில்லை ......!**

மலர்ந்த மலர்கள் மடியும் என்று......
மலரும் மலர்கள் நினைப்பதில்லை
சேர்ந்த உறவுகள் பிரியும் என்று .....
சேரும் உறவுகள் உணர்வதில்லை
இருமை என்பது உலகின் இயற்கை.
அதில் பிரிவு என்பது நியதி.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமைதி கொள்ளுமா? என் மனம்!

வரனென எனக்கமைந்த நற்குணநாயனனே!
கரம் பிடித்த நாள் முதலாய்
கணமேனும் நாம் பிரிந்ததில்லை
வெந்த புண்ணாய் என் மனம்
வேதனையிற் துடிக்குதையா!
கோணடவன் நீங்கள் போனபின் – அமைதி
கொள்ளுமா என் மனம்
அத்தனை விரைவினில் விட்டோடிப்
போவதற்கு எப்படி மனம் வந்ததையா!
குடிதென இத்துயர் சூழுமென்று — நான்
கனவிலும் எண்ணவில்லை
கண்ணிமைபோல காத்தும்
உம் உயிரை எம்மால் பிடிக்கமுடிஎயவில்லையே!
முடிவில்லாத்த துயர் எனக்குத் தந்து — நீங்கள்
விழி மூடிப்போனது நியாயமில்லை

**அன்பு மனைவி**
**மகேஸ்வரி**

## மகன்மார் புலம்பல்

## கனிவான அப்பாவே!

கனிவான அப்பாவே! இடியென வந்த செய்தி — நீங்கள்
மடிந்த செய்தி சொன்னபோது விம்மி நெஞ்சு வெடிக்குதப்பா!
அப்பா என்று அழைக்க இனி எமக்கு யாருமில்லை — உங்கள்
ஓர் வார்த்தை எமக்கு உச்சி குளிரவைக்கும் அப்பா
கடல் கடந்த நாட்டில் இருந்து கலங்கி தவிக்கின்றேனே!
கடிதென மரணம் – உம்மை காவு கொள்ளுமென்று கனவிலும்
எண்ணவில்லை வெடித்துச் சிதறிய என் நெஞ்சத்து
வேதனைகள் இன்னும் குறையவில்லை எம் இருவரையும்
பெற்று வளர்த்து ஆழாக்கி எமக்கு துணை தேடிக் கொடுத்து
விட்டு எம்மை கலங்கவைத்துப் போனது ஏன் அப்பா?

**அன்பு மகன்மார்**
**குரு (சுவிஸ்), நிசாந்தன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகள் புலம்பல்

### மனம் கிடந்து குமுறுதப்பா

மனம் கிடந்து குமுறுதப்பா!
உள்ளம் கிடந்து தவிக்குதப்பா!
உங்கள் நினைவு வந்து கொல்லுதப்பா!
காலை எழுந்தவுடன் உங்கள்
முகம் காணாது தவிக்கின்றேன் அப்பா!
கண்ணுக்குள் மணியாகி நெஞ்சுக்குள்
நிலையாகி என்னை மார்போடும்
தோளோடும் தூக்கி வளர்த்து
என் அருகே காத்திருந்த
காலங்கள் பல நீங்கள் இல்லா
என் வீடு வெறிச்சோடிக்கிடக்கிறது
அப்பா! கோடிய நோய் வந்ததென எண்ணிய நாள்
தொடக்கம் கனகாலம் நீங்கள்
நலமோடு வாழ வேண்டுமென்று கல் வைத்த
சிலையெல்லாம் கடவுள் என நம்பினேன் அப்பா!
இறுதியில் உங்கள் ஆசை வார்த்தை கேட்பதற்கு
தலையடியில் காத்திருந்தேன் அப்பா!
பிள்ளையென்று பிரியமுடன் அழைத்து குரல் இன்றும்
மனதில் ஒலித்துக் கொண்டே இருக்குதப்பா!
புன் சிரிப்புடன் அமர்ந்திருக்கும்
உம் நினைவும் பகிடிக்கதை கூறி பலரை
சிரிக்க வைத்த பண்பான
உள்ளம் அப்பா சொல்லாமற் கொள்ளாமல்
எங்கு சென்றீர்கள் மனம் கிடந்து குமுறுதப்பா!

**இப்பிவால் துடி துடித்துப் போன**
**அருமை மகள் கோமலர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருமகள்மார் புலம்பல்

## மனம் நிறைந்த மாமா

மாதவம் செய்து வைத்தோம்
நாமும் மாமனாய் நீங்கள்
வந்து வாய்ப்பதற்கு
சுடு சொல்லொன்றும் நீங்கள் பேசியதில்லை
சூதுவாதும் உங்கள் மனதில்லை உள்ளமும் உயர்ந்தது
மாமா விவசாய மன்னன் மாமா
விளை நிலமும் உங்கள் சொற் கேட்கும் மாமா
மருமக்களையும் உங்கள் மக்களாய் பார்க்கும்
மாண்பு கொண்டவர் நீங்கள் மாமா
எம்மை தவிக்கவிட்டு ஏன் மாமா
வானம் சென்றீர்கள் ஆறவில்லை எங்கள் மனம்

**அன்புமருமக்கள்**
**கஜினா (சுவிஸ்), லேகாந்தி**

## மருமகன் புலம்பல்

## என் இதயம் கலங்கியதே

என் இதயம் கலங்கியதே!
மனிதருள் மாணிக்கம் நீங்கள்
மாமா முதலில் வந்த மருமகன் நான்
முற்றிலும் என்னை வழி நடத்தியவர் நீங்கள் மாமா

சற்றேனும் விலகாமல் எம்மோடிருந்தீர்கள் சந்தோஷமாய்
பேரப்பிள்ளைகளோடு குலாவி மகிழ்ந்தீர்கள்
கள்ளமில்லா உங்கள் உள்ளம் காலனவன் கள்வனாக வந்து
உங்களை கவர்ந்து சென்றதேனோ

உற்றகதை கூறி உளமதை இலேசாக்கி நண்பர்களைப்போல்
நலமுடன் பழகி வந்தோம் கண்பட்டது போல நம் உறவு
கலைந்து போய்விட்டது மாமா உங்கள் ஆத்மா
சாந்தியடைய ஆண்டவனை வேண்டுகின்றேன்.
**மருமகன் சதீஸ்குமரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அருமை அண்ணாமார் புலம்பல்

**தாங்கவில்லை உன் பிரிவு!**

தொலைபேசி அழைப்பினிலே அடியென வந்த செய்தி
எங்கள் இதயத்தை பிளந்ததையா!
நெடு தூரம் இருந்து ஒரு ஆசை வார்த்தை கேட்பதற்கு
ஓடோடி வந்தோம், ஒன்றுமே பேசாது
உம் விழியை மூடி விட்டீரோ ஒரு கூட்டுப் பறவை போல்
ஒன்றாக நாமிருந்த காலங்கள் ஓவியமாய் உள்ளதடா தம்பி
ஏழ் பிறப்பிலும் இனிக் காண்போமோ
என ஏங்கி மனம் கலங்குகின்றோம்
எங்களுக்கு இளையவனாக இருந்தாலும்
பக்கபலமாய் இருந்தாயடா தம்பி – உன் முகம் தேடி
கலங்கி தவிக்கும் உடன் பிறப்புக்கள்

**அருமை அண்ணாமார்**
**கந்தையா (கனடா),**
**சண்முகசுந்தரம் (மாங்குளம்)**

## அன்புப் பேர்த்தி புலம்பல்

என் பேர்த்தி என்றென்னை எப்போதும் தூக்கி அணைத்து
மடியில் இருத்தி மகிழ்வுடனே விளையாடி
நன்றாக வாழ நல்வழி காட்டி
நல்லறிவுரைகள் கூறி நம்மை வழி நடத்தினீர்கள்
பழைய கதைகள் கூறி என்னை பண்புடனே எமை அணைத்தீர்
காலனவன் உமைவா என கணக்கெழுதி வைத்தானா?

**அன்புப்பேர்த்தி**
**நதுஜா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேரப்பிள்ளைகள் புலம்பல்

### விரைந்து வாங்கோ அம்மப்பா ...

விரைந்து வாங்கோ அம்மப்பா
கனதூரம் நடந்து நடந்து
களைத்து நீங்கள் வந்தாலும்
தூக்கி எம்மை மடியில் வைத்து
கொஞ்சிக் கொஞ்சி மகிழ்வீர்கள்

நாங்கள் என்றால் உங்களுக்கு
கொள்ளைப் பிரியம் அம்மப்பா
நீங்களென்றால் எனக்கு நல்ல
விருப்பம் அம்மப்பா

எங்கள் அழுகை குரல் கெட்டால் எங்கிருந்தால்
ஓடிவந்து எம்மை எல்லாம்
ஆரவணைத்தால் போதும்
எங்கள் அழுகை உடனே நின்று விடும்

குடிக்க நீங்கள் தண்ணீர் கேட்டால்
நாங்கள் தான் கொண்டு வந்து தருவோமே
ஏன்? நீங்கள் வரவில்லை என
ஏங்குகின்றோம் அம்மப்பா

**மழலை பேசும் பேரப்பிள்ளைகள்**
**நதுஜா, கபிஷனா, சரணிகா**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேரப்பிள்ளைகள் புலம்பல்

### அன்பு நிறைந்த அப்பப்பா

அன்பு நிறைந்த அப்பப்பா!
எங்கள் மீது ஆசைகொண்ட அப்பப்பா
எங்கு சென்றீர்கள் எம்மை விட்டு
எப்ப மீண்டும் வருவீர்கள்

எம்மை விட்டு நீரும் சென்றபின்னே!
அறியும் வயது எமக்கில்லை
அறிந்து கொண்டோம்
உங்கள் அன்பை அப்பப்பா

ஊரில் உம் செயலால் எம் பெயரும்
உயர்ந்தது அப்பப்பா
தேரில் பவனிவரும் தெய்வக் காட்சிகளை
தெளிவாய் காட்டி ஊட்டிய உன்
கைகள் வாய் உறைந்து
கிடக்கிறது அப்பப்பா
வாட்டம் பொறக்காமல் நாமிங்கே
புலம்புகின்றோம் அப்பப்பா

**பேரப்பிள்ளைகள்**
**நிருபன், மாதங்கி, தனுஷிகன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மைத்துனர், மைத்துனிமார் புலம்பல்

### மெழுகுபோல் உருகுகின்றோம்..

மெழுகுபோல் உருகுகின்றோம்
அன்புச் சகோதரன் போல் அன்பு காட்டி
அறியாத கதைகள் பல கூறி பகிடிக்கதைகள் சிரிப்புக்கதைகள்
பல சொல்லி உன் குறும்புத்தனங்கள் என்றும் எங்கள்
மனங்களில் அழியாது உன் ஞாபகத்தை மேலும்
மெருகூட்டியவ வண்ணம் நீர் எம்முடன் வாழ்ந்த
நினைவெல்லாம் கண்கலங்கி விழிநீராய் பெருகுகின்றதே
ஏங்குகின்றோம் உன் அன்பிற்காய்

**மைத்துனர் - கந்தசாமி**

**மைத்துனிமார் - சந்திரா, வசந்தராணி, இராசமணி, கமலாதேவி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறவுகள் மேம்பட

* நானே பெரியவன். நானே சிறந்தவன் என்ற அகந்தையை (Ego) விடுங்கள்.
* அர்த்தமில்லாமலும் பின் விளைவு அறியாமலும் பேசிக்கொண்டிருப்பதை விடுங்கள் (Loose Talks)
* எந்த விஷயத்தையும், பிரச்சினையையும் நாசூக்காக கையாளுங்கள் (Diplomacy) விட்டுக் கொடுங்கள். (Compromise)
* சில நேரங்களில் சில சங்கடங்களைச் சகித்துத்தான் ஆக வேண்டும் என்று உணருங்கள் (Tolerance)
* நீங்கள் சொன்னதே சரி, செய்ததே சரி என்று வாதாடாதீர்கள் (Abamant Argument) குறுகிய மனப்பான்மையை விட்டொழியுங்கள் (Narrow Mindedness)
* உண்மை எது பொய் எது என்று விசாரிக்காமல் இங்கே கேட்டதை அங்கே சொல்வதையும், அங்கே கேட்டதை இங்கே சொல்வதையும் விடுங்கள். (Carrying Tales)
* மற்றவர்களைவ விட உங்களையே எப்போதும் உயர்த்தி நினைத்து கர்வப்படாதீர்கள் (Superiority Complex)
* அளவுக்கதிகமாய், தேவைக்கதிகமாய் ஆசைப்படாதீர்கள் (Over Expectation)
* எல்லோரிடத்திலும் எல்லா விஷயங்களையும் அவர்களுக்கு சம்பந்தம் உண்டோ, இல்லையோ சொல்லிக் கொண்டிருக்காதீர்கள்
* கேள்விப்படுகிற எல்லா விஷயங்களையும் நம்பி விடாதீர்கள்
* அற்ப விஷயங்களையும் பெரிதுபடுத்தாதீர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* உங்கள் கருத்துக்களில் உடும்புப்பிடியாய் இல்லாமல், கொஞ்சம் தளர்த்திக் கொள்ளுங்கள் (Flexibility)
* மற்றவர் கருத்துக்களை, செயல்களை, நடக்கின்ற நிகழ்ச்சிகளைத் தவறாக புரிந்து கொள்ளாதீர்கள் (Misunderstanding)
* மற்றவர்களுக்குரிய மரியாதை காட்டவும். இனிய இதமான சொற்களைப் பயன்படுத்தவும் தவறாதீர்கள் (Courtesy)
* புன்முறுவல் காட்டவும் சிற்சில அன்புச் சொற்களைச் சொல்லவும் கூட நேரமில்லாதது போல் நடந்து கொள்ளாதீர்கள்
* பேச்சிலும், நடத்தையிலும் பண்பில்லாத வார்த்தைகளையும் தேவையில்லாத மிடுக்கையும், காட்டுவதைத் தவிர்த்து அடக்கத்தையும் தேவையில்லாத மிடுக்கையும் காட்டுவதைத் தவிர்த்து அடக்கத்தையும், பண்பையும் காட்டுங்கள்
* அவ்வப்போது நேரில் சந்தித்து மனம் திறந்து பேசுங்கள்
* பிரச்சினைகள் ஏற்படும் போது அடுத்தவர் முதலில் இறங்கிவர வேண்டும் என்று காத்திருக்காமல் நீங்களே பேச்சைத் துவக்க முன் வாருங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர்க் காணிக்கை

பிறப்பு 17 - 10 - 1954



இறப்பு 14 - 07 - 2016

மாதகல் கிழக்கு, மாதகலைப் பிறப்பிடமாகவும்
வசிப்பிடமாகவும் கொண்ட

## அமரர். திரு.இராமசாமி சோமசுந்தரம்

ஆண்டவன் படைப்பினால்
அவனிக்கோர் அருமருந்தாய்
அன்பினால் உலகை ஆண்டீர்
பண்பினால் சிறந்தோங்கி
பகலவன் போல் பாரினில் ஒளிர்ந்து
பாரினிலே வாழ்ந்த நீர்
காரியங்களில் எம்மோடு தோள் கொடுத்தீர்
காலனவன் கணக்கெழுதி
உமை வா என்று அழைத்தானோ
உறவுகள் உருகி நிற்க
உருக்குகின்றோம் கண்ணீரை

அன்னாரின் ஆத்மா சாந்திடைய இறைவனை பிரார்த்திப்பதுடன்
அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினர்க்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பிரிவால்த் துயருறும்
திரு.திருமதி.துரைராசா குடும்பத்தினர்
மாதகல் கிழக்கு

15.07.2016



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



மலர்வு
1954.10.17

உதிர்வு
2016.07.14

எமது சங்க செயலாளர் ச. கோமலர் அவர்களின் தந்தை

## அமரர். இராமசாமி சோமசுந்தரம்

நேற்றிருந்த குலவிளக்கு
இன்று அணைந்து விட்டதுவே
பார்த்திருந்த உறவுகளோ
பதறியழுது தவிக்கின்றனர்
போற்றி வாழ்ந்த குடும்பத்தினர்
புலம்பியழுது நிற்கின்றனர்
கண்ணிமைக்கும் நேரத்திற்குள்
காலன் உமைக்கவர்ந்து சென்றான்
வேண்டுகின்றோம் இறைவனிடம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவுத் துயர் பகிரும்
மாறகல் விநாயகர் சிக்கன கடன் கூட்டுறவுச் சங்க
அங்கத்தவர்கள்

15.07.2016

வானவில் பிறிண்டேர்ஸ், மாதகல் வீதி, பண்டத்தரிப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி

வையித்திலிங்கம் + .........

↓

இராமசாமி + தங்கம்மா

- இராசம்மா
- செல்லமுத்து
- பேரம்பலம்
- வள்ளியம்மை
- கந்தையா
- சிந்தாமணி
- சண்முகசுந்தரம்
- துரைராசா
- சோமசுந்தரம்

வல்லிபுரம்

↓

கணபதிப்பிள்ளை + பொன்னம்மா

- தியாகராசா
- கனகம்மா
- கதிரவேலு
- அன்னலட்சுமி
- வையித்திலிங்கம்
- மகேஸ்வரி

சோமசுந்தரம் — மகேஸ்வரி

- இருகுலசிங்கம் + கஜினா (சுவிஸ்)
- கோமலர் + சதீஸ்குமரன்
  - நதுஜா
  - கபிஷனா
  - சரணிகா
- ஜிசாந்தன் + லேகாந்தி
  - நிருபன்
  - மாதங்கி
  - தனுஷிகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கின்றோம்



எமது அன்பிற்குரிய குடும்பத் தலைவர் அமரர். இராமசாமி சோமசுந்தரம் அவர்கள் அமரத்துவச் செய்தி கேட்டு ஓடோடி வந்து உதவி புரிந்த அன்புள்ளங்களுக்கும், தொலைபேசி மூலமும், நேரில் வந்தும், துயர் பகிர்ந்த அனைத்து உறவுகளுக்கும், கண்ணீர் அஞ்சலி வெளியிட்டோருக்கும், ஈமக்கிரியை கள், அந்தியேட்டி, சபீண்டீகரணக் கிரியைகள் மேற் கொண்ட அந்தண குருமார்களுக்கும், இம் மலரினை அழகுற வடிவமைத்து தந்த வானவில் பிறிண்டேர்ஸ் அச்சகத்தினருக்கும் எமது குடும்பத்தினர் சார்பில் நன்றி களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**மாதகல் கிழக்கு,**
**மாதகல்.**

**இங்ஙனம்**
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது
எது நடக்கிறதோ,
அது நன்றாகவே நடக்கிறது
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையதை எதை இழந்தாய்.
எதற்காக நீ அழுகிறாய்
எதை நீ கொண்டுவந்தாய்
அதை நீ இழப்பதற்கு
எதை நீ படைத்திருந்தாய்,
அது வீணாவதற்கு
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ
அது நாளை
மற்றொருவருடையதாகிறது
மற்றொருநாள்,
அது வேறொருவருடையதாகும்.



"இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின் சாராம்சமாகும்"

**பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்**

வானவில் பிறிண்டேர்ஸ்,
மாதகல் வீதி, பண்டத்தரிப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org